(Chapter XXIII code of Criminal procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO-II, CHENGALPATTU.**
**DEPOSITION OF WITNESS**
**CC No. 181/2017**

| | |
|---|---|
| Deposition of witness for | : LW2/ PW2 |
| Name | : S.Ramesh |
| Father's Name | : A. Shanmugam |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Dated | : 26-07-2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26-07-2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆர் பிஎப் ஆய்வாளராக தலைமை நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.07.2014 அன்று இநத வழக்கில் விசாரணை மேற்கொண்டு வழக்கின் சொத்துக்களை ரயில்வே புக்கிங் செய்யப்பட்ட 16 எண்ணிக்கைகள் கொண்ட ஏலக்காய் மூட்டைகள் அவை சென்றடையவேண்டிய நபருக்கு இந்நீதிமன்றத்தின் அனுமதிபெறுவதற்காக அபிடவிட் தாக்கல் செய்து அனுமதி பெற்று கடந்த 08.08.2014 அன்று புக்கிங் செய்த நபர்களை திரு.மதன், திரு.ரமேஷ், திரு.பால்பாண்டி ஆகியோர்களை செங்கல்பட்டு ஆர்பிஎப் காவல் நிலையம் வரவழைத்து அவர்களை விசாரித்ததில் அந்த மூட்டைகளை மதுரை ரயில் நிலையத்தில் இருந்து ஹ வுரா அனுப்புவதற்கு 20.06.2014 மற்றும் 21.06.2014 ல் அன்று புக்கிங் செய்ததாகவும் மேற்படி மூட்டைகளை அடையாளம் காண்பித்தார்கள். மேலும், இந்நீதிமன்றத்தின் உத்தரவின்படி ஒரு ஒரு மூட்டையில் இருந்து தலா 1 கிலோ ஏலக்காயும், மற்றும் மேலே உள்ள பையையும்

மாதிரிக்காக எடுத்துக்கொண்டோம். மற்றும் மூட்டைகளை புகைப்படம் எடுத்து நீதிமன்றத்தில் சமர்த்தோம். மூன்று நபர்களையும் விசாரணை செய்து வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன். அந்த மூட்டைகளை 09.08.2014 ல் வண்டி எண் 12666 செங்கல்பட்டில் இருந்து ஹ வுரா இரயில் நிலைத்திற்கு ஆர்பிஎப் எஸ்கார்டு மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. மேலும இந்த வழக்கின் கடந்த 28.08.2014 அன்று நானும் என்னுடன் சகாக்களும் இரயில்வே திருட்டு சம்மந்தமாக கண்காணிப்பில் இருந்து போது செங்கல்பட்டு இரயில் நிலையத்தில் இரவு சுமார் 11.30 மணியளவில் ஒரு நபர் சந்தேகத்தின் பேரில் இரயில்வே வண்டி 16859 சென்னை எக்மோரில் இருந்து மங்களுர் செல்லும் வண்டி செங்கல்பட்டு இரயில்நிலையம் ப்ளாட்பார்ம் 6 இல் நின்று கொண்டிருந்தபோது அந்த சந்தேகத்திற்குரிய நபர் இந்த இரயிலின் முன் பார்சல் கோச்சில் ஒட்டப்பட்டிருக்கும் விபரங்களை பார்த்துக்கொண்டிருந்தார். கோச் எண்ணானது எஸ்எல்ஆர் 1 2704. நாங்கள் அந்த நபரை பிடித்து விசாரணை செய்தோம். விசாரணை செய்ததில் இதற்கு முன்பு அவர் ஜீன் மாதத்தில் ரயில்வே புக் செய்யப்பட்ட ஏலக்காய் மூட்டைகளை மேல்மருத்தூர் டு மதுராந்தகம் இடையே பார்சல் மூட்டைகளை தள்ளிவிட்டு அந்த மூட்டைகளை திருடி செல்ல முயற்சி செய்தார் என்று ஒப்புதல் வாக்குமூலம் கணேஷ் மற்றும் சந்திர சேகர் மற்றும் ஆர்பிஎப். உன்னிகிருஷ்ணன் முன்னிலையில் அளித்தார். அதில் எதிரி கையொம்பம் செய்துள்ளார். எதிரியை நான் அடையாளம் காண்பிப்பேன். மேலும், எதிரி எ 1, வழிநடத்திச் செல்ல ஏற்கனவே அவர் எந்த இடத்தில் திருட முயற்சி செய்தாரோ அந்த இடத்தினை அடையாளம் காட்டினார். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகள் கணேசன் மற்றும் சந்திரசேகர் முன்னிலையில் தயார் செய்தேன் அந்த பார்வை **மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா-ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை கைது செய்வதற்கான காரணங்களை கூறி எதிரியை கைது

செய்து காவல் நிலையம் கொண்டு வந்து அக்கரன்ஸ் ரிப்போர்ட் தயார் செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினோம். மேலும், 30.08.2014 அன்று சாட்சிகள் கணேசன், சந்திரசேகர் மற்றும் உன்னிகிருஷ்ணன் ஆகியோரை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன். மேலும் இந்த வழக்கின் இரண்டாம் எதிரியை இதேமாதிரியான ஒரு திருட்டு வழக்கில் சென்னை எக்மோர் ஆர்பிஎப் நிலையம் குற்ற எண் 10/2014 கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நபரை இந்நீதிமன்றத்தில் முறையான அனுமதி பெற்று புழல் சிறை சென்று எ 2, எதிரியை இந்த வழக்கில் தொடர்பு உடையவர் என்று கைது செய்து பின்பு அவரை நீதிமன்றதில் ஆஜர்படுத்தி நீதிமன்ற காவலுக்கு 30.09.2014 அன்று உட்படுத்தப்பட்டார். மேலும், கடந்த 13.10.2014 அன்று திரு.ஓ. மனோகர், அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரிடம் வழக்கு சொத்திற்கான சான்றினை பெற்றேன். இதன் பிற்பாடு பட்டியல் சாட்சி 9 ஆகியோரை விசாணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரிடம் இருந்து மற்றொரு சான்றிதல் பெற்றேன். அன்றைய தினமே ஜி.ராமன், பழனி சேகர், சேது, தமையந்தி, தனலட்சுமி , விவேகானந்தம், உதயசந்தர் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னுடைய விசாரணை முடித்து நான் பயிற்சிக்காக செல்வதால் இந்த வழக்கின் மற்ற விசாரணைக்காக திரு.ஏழுமலை, ஆய்வாளர் என்பவரிடம் கோப்பினை ஒப்படைத்தேன்.

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.